**டிசம்பர் – 22**

# TNPSC துளிகள்

- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் ஆனந்த் மஹிந்திரா என்பவர் மஹிந்திரா குழுமத்தின் நிர்வாகத் தலைவர் பதவியில் இருந்து விலகுவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.
  - இந்தப் பதவி விலகலுக்குப் பிறகு இவர் அந்நிறுவனத்தின் நிர்வாகம் சாராத தலைவராக செயல்பட இருக்கின்றார். பவன் கோயங்கா என்பவர் மீண்டும் அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட இருக்கின்றார்.
- சந்திரயான் 3 என்ற விண்வெளித் திட்டத்தின் திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் ஆவார். இந்த விண்கலம் அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்தில் விண்ணில் செலுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.
- கேரள அரசின் 'சில்வர் லைன்' என்ற ஒரு திட்டத்திற்கு மத்திய ரயில்வே அமைச்சகமானது தனது கொள்கை ரீதியான ஒப்புதலை அளித்துள்ளது.
  - கேரள மாநிலத்தின் இரு முனைகளுக்கும் இடையே (532 கி.மீ. நீளம்) அரை அதிவேக ரயில்களை இயக்குவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

# தேசியச் செய்திகள்

## அறிவியல்சார் கட்டுரைகள்

- அறிவியல் மற்றும் பொறியியல் தொடர்பான கட்டுரைகளை அதிக அளவில் வெளியிடுவதில் உலகின் மூன்றாவது நாடு இந்தியா என்று அமெரிக்காவின் சமீபத்திய அறிக்கை ஒன்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- அறிவியல் தொடர்பான உலகளாவிய மொத்தக் கட்டுரைகளில் 20.67 சதவீதத்தை சீனக் கட்டுரைகள் கொண்டிருக்கின்றன.
- இந்தப் பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது.
- அறிவியல் தொடர்பான கட்டுரைகளை வெளியிடுவதில் சீனாவைத் தொடர்ந்து அமெரிக்கா 16.54 சதவீதத்தைக் கொண்டுள்ளது.
- இது அமெரிக்காவின் தேசிய அறிவியல் அமைப்பால் (National Science Foundation - NSF) தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- உலகளவில் அறிவியல் மற்றும் பொறியியல் தொடர்பான கட்டுரைகளை வெளியிடுவதில் இந்தியா தற்பொழுது 5.31 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

## 18வது தேசியக் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு வாரியம் (National Maritime Search and Rescue Board - NMSARB)

- இந்தக் கூட்டத்தை இந்தியக் கடலோரக் காவல்படையானது (Indian Coast Guard - ICG) புது தில்லியில் ஏற்பாடு செய்தது.
- இந்த வருடாந்திரக் கூட்டமானது கொள்கை ரீதியான பிரச்சினைகள், வழிகாட்டுதல்கள் & நடைமுறைகளை வகுத்தல் மற்றும் தேசியத் தேடல் மற்றும் மீட்புத் திட்டத்தின் (National Search and Rescue Plan - NSRP) செயல்திறனை மதிப்பிடுவதற்காக நடத்தப்பட்டது.

- இந்தக் கூட்டத்தில் மூன்று புதிய நிரந்தர உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்தப் புதிய உறுப்பினர்களாவன: மத்திய கப்பல் துறை அமைச்சகம், கால்நடை வளர்ப்பு, பால் & மீன் வளத் துறை மற்றும் பெருங்கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் (INCOIS - Indian National Centre for Ocean Information Service).
- மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியக் கடலோர காவல்படையானது, கடல்சார் தேடல் மற்றும் மீட்புக்கான இந்தியாவின் தலைமை நிறுவனமாகும்.

## அடுத்தத் தலைமுறைப் போக்குவரத்து அமைப்புகளுக்கான முதலாவது சிறப்புமிகு மையம்

- மத்திய ரயில்வே அமைச்சகத்தின் கீழ் ஒரு பல்கலைக்கழகமாகக் கருதப்படும் தேசிய ரயில் போக்குவரத்து நிறுவனமானது புது தில்லியின் ரயில் பவனில் உள்ள இங்கிலாந்தின் பிர்மிங்காம் பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இது அடுத்தத் தலைமுறைப் போக்குவரத்து அமைப்புகளுக்கான முதலாவது சிறப்புமிகு மையத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிர்மிங்காம் ரயில்வே ஆராய்ச்சி மற்றும் கல்வி மையமானது (Birmingham Centre for Railway Research and Education - BCRRE) ஐரோப்பாவில் உள்ள ரயில்வே ஆராய்ச்சி மற்றும் கல்விக்கான மிகப்பெரிய பல்கலைக் கழகத்திற்கு இணையான ஒரு மையமாகும்.

## மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தினம்

- தில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தினத்தை நினைவுகூறுவதற்கான தேசியக் குழுவின் இரண்டாவது கூட்டத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமை தாங்கினார்.
- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர், பிரதமர், அனைத்து மாநிலங்களின் முதலமைச்சர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், காந்தியவாதிகள், சிந்தனையாளர்கள் மற்றும் அனைத்துத் தரப்பு மக்கள் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.
- ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டு முன்னாள் செயலாளர்களான திரு. கோஃபி அன்னான் மற்றும் திரு. பான் கீ மூன் உள்பட ஒன்பது சர்வதேச உறுப்பினர்கள் இந்தக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

### *காந்தி குடியுரிமை கல்விப் பரிசு*

- மகாத்மா காந்தியின் கொள்கைகளை மேம்படுத்த உதவும் வகையில் காந்தி குடியுரிமை கல்வி பரிசு என்ற ஒரு பரிசை ஏற்படுத்த இருப்பதாக போர்ச்சுக்கீசிய பிரதமர் அன்டோனியோ கோஸ்டா அறிவித்துள்ளார்.
- காந்தியின் பல்வேறு எண்ணங்கள் மற்றும் மேற்கோள்கள் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டதற்காக ஒவ்வொரு ஆண்டும் இந்த விருதானது வழங்கப்பட இருக்கின்றது.
- இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் ஒரே அயல்நாட்டு பிரதமர் போர்ச்சுக்கீசிய பிரதமர் ஆவார்.
- இந்தப் பரிசின் முதலாவது பதிப்பானது விலங்குகளின் நலனுக்காக அர்ப்பணிக்கப்பட இருக்கின்றது. ஒரு தேசத்தின் மகத்துவமானது அத்தேசத்தில் விலங்குகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்துத் தான் தீர்மானிக்க

முடியும் என்று மகாத்மா காந்தி கூறினார்.

# பொருளாதாரச் செய்திகள்

## அசோசாமின் 100வது ஆண்டு

- புது தில்லியில் உள்ள வர்த்தக மற்றும் தொழில்துறை தொடர்புடைய கூட்டமைப்பில் (Associated Chambers of Commerce and Industry - ASSOCHAM) இந்தியப் பிரதமர் உரையாற்றினார்.
- "5 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எட்ட புதிய இந்தியா எண்ணுதல்" என்ற தலைப்பில் அசோசாமின் 100வது ஆண்டை நினைவுகூறும் வகையில் இந்த நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- அசோசம் என்பது 1921 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியாவின் தலைமை வர்த்தகச் சங்கமாகும்.
- இந்த அமைப்பானது கொல்கத்தா, பெங்களூரு மற்றும் அகமதாபாத் ஆகிய நகரங்களில் அமைந்துள்ளது.

**NEW ORDER**

| Ranking | Country | GDP '18 ($ trillion) |
|---|---|---|
| 1 | US | 20.5 |
| 2 | China | 13.6 |
| 3 | Japan | 5.0 |
| 4 | Germany | 4.0 |
| 5 | UK | 2.8 |
| 6 | France | 2.8 |
| **7** | **India** | **2.7** |
| 8 | Italy | 2.1 |
| 9 | Brazil | 1.9 |
| 10 | Canada | 1.7 |
| 11 | Russia | 1.7 |
| 12 | S Korea | 1.6 |
| 13 | Australia | 1.4 |
| 14 | Spain | 1.4 |

Source: World Bank

## எச்டிஎஃப்சி வங்கி

- எச்டிஎஃப்சி வங்கியானது 100 பில்லியன் அமெரிக்க டாலர் (ரூ. 7 லட்சம் கோடி) மற்றும் அதற்கு மேற்பட்ட சந்தை உச்ச வரம்பு கொண்ட நிறுவனங்களின் பட்டியலில் நுழைந்த இந்தியாவின் மூன்றாவது பட்டியலிடப்பட்ட நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

- 100 பில்லியன் அமெரிக்க டாலர் உச்ச வரம்பை எட்டிய மற்ற இரண்டு நிறுவனங்கள் பின்வருமாறு: ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (இதன் சந்தை உச்ச வரம்பு 140.74 பில்லியன் டாலர் – இந்திய மதிப்பு: ரூ. 10 லட்சம் கோடி) மற்றும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (இதன் சந்தை உச்ச வரம்பு 114.60 பில்லியன் டாலர் – இந்திய மதிப்பு: ரூ. 8 லட்சம் கோடி) ஆகும்.

### காய்கறி ஏற்றுமதி

- வாரணாசிப் பகுதியிலிருந்து பெறப்பட்ட புதிய காய்கறிகளின் முதலாவது சோதனை முறையிலான கப்பல் போக்குவரத்தானது கடல்வழிப் பாதை வழியாக மும்பையிலிருந்து துபாய்க்கு கொடியசைத்துத் துவக்கி வைக்கப்பட்டது.
- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது (APEDA - Agricultural and Processed Food Products Export Development Authority) இந்தியாவில் விளையும் விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்வதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### வெளிக்கோள்களைக் கண்டறியும் செயற்கைக்கோள் (CHEOPS)

- இது உயிர் வாழ்வதற்குத் தகுதியுள்ள வெளிக் கோள்களைக் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வெளிக் கோள்களைத் தேடுவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட முதலாவது திட்டம் இதுவாகும்.
- இது ஒரு சோயுஸ் விண்கலன் மூலம் வெற்றிகரமாக ஏவப்பட்டது.
- இது பிரெஞ்சு கயானாவில் ரஷ்ய சோயுஸ் கயானா விண்வெளி மையத்திலிருந்து விண்ணுக்கு ஏவப்பட்டது.
- இதுவரை, விஞ்ஞானிகள் நட்சத்திரங்களைச் சுற்றிவருகின்ற 4,000 வெளிக் கோள்களைக் கண்டுபிடித்துள்ளனர். இதில் அதிக எண்ணிக்கையிலான பூமி போன்ற வெளிக் கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் நாசாவின் கெப்லர் செயற்கைக்கோள் சேகரித்த தரவுகளைப் பயன்படுத்தி இந்த வெளிக் கோள்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

### பினாகா ராக்கெட்

- பினாக்கா எம்.கே. III ராக்கெட்டின் மேம்படுத்தப்பட்ட பதிப்பானது ஒடிசாவின் சண்டிப்பூரிலிருந்து வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது.
- இந்த ராக்கெட்டின் துல்லியத் தன்மையை மேம்படுத்துவதற்காகவும் அதன் வரம்பை மேம்படுத்துவதற்காகவும் வழிசெலுத்தல், கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதல் அமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் இது ஏவுகணையாக மாற்றப்படுகின்றது.
- பினாகா என்பது ஒரு பீரங்கி ரக ஏவுகணை அமைப்பாகும். இது 75 கி.மீ தூரத்திற்கு சென்று அதிக துல்லியத் தன்மையுடன் எதிரி எல்லைக்குள் இருக்கும் இலக்கைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டது.
- ஏவுகணையின் வழிசெலுத்தல் அமைப்பானது NAVIC என்று அழைக்கப்படும் இந்தியப் பிராந்திய கண்காணிப்பு செயற்கைக்கோள் அமைப்பின் (Indian Regional Navigation

Satellite System - IRNSS) மூலம் செயல்படுத்தப் படுகின்றது.

- இந்த ஏவுகணை அமைப்பானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பைச் (Defence Research and Development Organisation - DRDO) சேர்ந்த பல்வேறு ஆய்வகங்களினால் கூட்டாக உருவாக்கப் பட்டுள்ளது.
  - ஆயுத ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு
  - பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகம்
  - ஆதாரம் மற்றும் பரிசோதனை அமைப்பு
  - உயர் ஆற்றல் பொருள்கள் ஆராய்ச்சி ஆய்வகம்

### நடமாடும் மருந்தகத்தின் மூலம் தடுப்பூசி வழங்கப்படுதல்

- இந்தியாவில் இதே வகையைச் சேர்ந்த முதலாவது சேவை என்று கூறப்படும் “நடமாடும் மருந்தகத்தின் மூலம் தடுப்பூசி வழங்கப்படுதலானது” புனேவில் தொடங்கப்பட்டுள்ளது.
- பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பிடமிருந்து மானியங்களைப் பெறும் ஜிவிகா சுகாதார நல அமைப்பின் நிறுவனரான ஜிக்னேஷ் படேல் இந்தக் கூட்டு முயற்சியின் பின்னணியில் உள்ள தொழில்முனைவோர் ஆவார்.
- மக்கள்தொகையில் குறைந்த வருமானத்தைப் பெறுபவர்களுக்கு குறைந்த விலையில் தடுப்பூசி சேவையை வழங்குவதே இந்தக் கூட்டுமுயற்சியின் அடிப்படை நோக்கமாகும்.
- இந்த மருந்தகங்கள் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நகராட்சிகளுக்குச் சென்று குடிமக்கள் வாழும் பகுதிகளுக்கு அருகில் உள்ள இடங்களிலேயே தடுப்பூசி முகாம்களை நடத்துகின்றது.
- இது தடுப்பூசி சார்ந்த சேவைகளை மட்டுமே வழங்க இருக்கின்றது.

## மாநிலச் செய்திகள்

### 11வது பிராந்தியத் தர மாநாடு (RQC - Regional Quality Conclave)

- இது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 20 அன்று உத்தரகாண்ட் மாநிலத்தின் உதம் சிங் நகர் மாவட்டத்தில் உள்ள ருத்ராபூரில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது பிஎச்டி வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்புடன் (PHD Chamber of Commerce and Industry - PHDCCI) இணைந்து இந்திய தர மன்றத்தினால் (Quality Council of India - QCI) ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த மாநாட்டின் மூலம் இந்தியத் தர மன்றமானது நாட்டின் மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள தொழில்துறைகளை அணுகலாம் என்று எண்ணுகின்றது.
- இந்த மாநாட்டின் கருப்பொருள், ‘ருத்ராபூர் RQC’: ‘தரம், புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப இடையீடுகளுடன் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி’ என்பதாகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### 2019 ஆம் ஆண்டின் இந்தியா இணைய வழிக் குற்றத் தடுப்பு காவல் துறை அதிகாரி

- ஹரியானாவின் குர்கானில் நடைபெற்ற வருடாந்திரத் தகவல் பாதுகாப்பு உச்சி

மாநாட்டின் போது மத்தியப் புலனாய்வு அமைப்பைச் சேர்ந்த அதிகாரியான பி பி ராஜு என்பவருக்கு '2019 ஆம் ஆண்டின் இந்தியா இணைய வழிக் குற்றத் தடுப்பு காவல் துறை அதிகாரி' என்ற விருது வழங்கப்பட்டது.

- ராஜஸ்தானில் உள்ள ஒரு பொறியியல் கல்லூரியால் நடத்தப்பட்ட ஆன்லைன் நுழைவுத் தேர்வில் மோசடி வழக்கை விசாரித்து அதனை நிரூபித்ததற்காக இவர் இந்த விருதைப் பெற்றுள்ளார்.
- இந்த விருதானது நாஸ்காம் - DSCI (இந்திய தரவு பாதுகாப்பு மன்றம் - Data Security Council of India) என்ற அமைப்பால் வழங்கப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★